<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

OS 05/2009

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 06.08.2024

Dw1 (பூபதி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்து எனக்கும் என் தந்தை மற்றும் என் சகோதரர்கள் ஐந்து பேருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரி. அ வ எண் 1619/93 என்ற வழக்கில் விளம்புகை பரிகாரம் வழங்கி பகரப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எங்களது உரிமை ஊர்ஜிதம் செய்யப்பட்ட வகையிலும் எனக்கும் என் தந்தை மற்றும் சகோதரர்களுக்கும் பாத்தியமானது என்றால் சரி. இந்த வழக்கு 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் எனக்கு 1/7 பங்கு பாத்தியம் உள்ளது என்றால் சரி. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தமாக எனக்கு பாத்தியப்பட்ட 1/7 பங்கு பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் மூலம் வாதிக்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் சமயத்தில் தாவா சொத்தில் என் சகோதரிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் வாரிசு அடிப்படையில் அவருக்கு உரிமையிருந்தது. தாவா 1 ம் அயிட்ட சொத்து காலியிடம் என்றால் சரி. தாவா 2 ம் அயிட்ட சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 15 சென்ட். அதை யாருக்கு, எப்போது விற்னேன் என்றால் 1995 ம் ஆண்டு என்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை, நானும் என் சகோதரர்களும் என் அப்பாவும் சேர்ந்து கிருஷ்ணசாமி என்பவருக்கு விற்றோம். அந்த கிரய பத்திரத்தை நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு விற்றோம் என்றால் ஞாபகமில்லை. மேற்படி கிரயத்தை மறைத்து வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் வாதிக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு ஒரு ஒப்பந்தமே நான் எழுதி கொடுக்கவில்லை. வாசாஆ 1 மற்றும் வாசாஆ 3 வாதிக்கு எழுதி கொடுத்த ஒப்பந்த பத்திரம் மற்றும் கால நீட்டிப்பு பத்திரம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரி. மேற்படி

பத்திரங்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அது மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வாசாஆ 1 மற்றும் 3 பத்திரங்களை நீதிமனற்த்தில் மனு தாக்கல் செய்து பார்வையிட்டேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 1 ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஒப்பந்தப்படி கிரயம் செய்து தர சொல்லி வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றால் ஆமாம். அந்த அறிவிப்பை பெற்ற பின் 04.01.1999 ல் வாசாஆ 3 கால நீட்டிப்பு ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்தபோது விற்கிரய உடன்படிக்கையில் மொத்த சொத்திற்கும் எழுதி கொடுத்தேனா என்று கேள்வி கேட்டபோது "இல்லை, 1/7 பாகத்திற்கு தான் எழுதி கொடுத்தேன் "என்று பதில் சொல்லியுள்ளேன் என்றால் அது 4 ம் பிரதிவாதியின் சொத்தை பொறுத்து கூறிய பதிலாகும். நான் வாதியுடன் 06.07.1998 தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் மூலம் தாவா சொத்துக்களை விற்பதாக ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொடுத்துவிட்டு தற்போது மாற்றி கிரய ஒப்பந்தம் எழுதி கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக் கொண்டு 04.01.1999 அன்று வாசாஆ 3 கால நீட்டிப்பு பத்திரமும் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் 3 பத்திரங்கள் பற்றி எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின் தெரிந்து கொண்டேன். மேற்படி ஆவணங்கள் மேசாடியானவை என்றும், அவற்றை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் தனியாக நடவடிக்கை எடுக்கவில்லை, வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிர்வாதம் செய்து வருகிறேன். தாவா 2 ம் அயிட்ட சொத்தை விற்றதை மறைத்து வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஒப்பந்தத்தின்படி கிரய தொகையாக ரூ.70,000/- ரூபாயில் ரூ.55,000/-முன் தொகையாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ல் சாட்சி கையொப்பம் இட்டுள்ள செல்லத்துரை மற்றும் அண்ணாதுரை ஆகியோரை தெரியுமா என்றால் யார் என்றே தெரியாது. வெங்கடாசலம் என்பவர் வாசாஆ 1 ஐ தயாரித்துள்ளார் என்றால் அவரையும் தெரியாது, அவர் நீதிமன்றதில் சாட்சி சொன்னபோது தான் தெரியும். வாசாஆ 3 ல் சாட்சி கையோப்பம் செய்துள்ள பழனிசாமி மற்றும் ஜி. சண்முகம் ஆகியோரை

தெரியுமா என்றால் தெரியாது, சண்முகம் சாட்சி சொன்னபோது தான் அந்த



விவரம் தெரியும். வாசாஆ 3 கால நீட்டிப்பு பத்திரத்தை ராமகிருஷ்ணன் என்பவர் எழுதியுள்ளார் என்றால் தெரியாது. மேற்படி இரு பத்திரங்களையும் பதிவு செய்யும்போது ரேகை மற்றும் கையொப்பம் பெறப்பட்டுள்ளது,மேற்படி கையொப்பம் மற்றும் கைரேதகை என்னுடையதல்ல என்று நான் கூறுவதை நிருபிக்கும் பொருட்டு கைரேகை நிபுணருக்கு அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. கைரேகை நிபுணருக்கு அனுப்பினால் வழக்கு எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் தான் நடடிவக்கை எடுக்கவில்லை என்றால் அவ்வாறு அனுப்ப வேண்டும் என்று எனக்கு தெரியாது. வாசாஆ 1 மற்றும் 3 ல் உள்ள கைரேகை மற்றும் கையொப்பங்கள் என்னுடையது தான் என்றும் அவற்றை மறுத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி ரவிசந்திரனை தெரியுமா என்றால் தெரியும். தாவா 1 ம் அயிட்ட சொத்தில் 40 சென்டை பொறுத்து 17.08.1998 ம் தேதி 2 ம் பிரதிவாதி பெயரில் ஒரு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். வாசாஆ 1 பதிவு செய்த தேதிக்கு பின் தான் மேற்படி பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் வாசாஆ 1 எழுதிக் கொடுக்கவில்லை. வாசாஆ 1 க்கு பின்னிட்டு எழுதப்பட்டுள்ளதால் மேற்படி பவர் பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிக்கு எழுதி கொடுத்த கிரய ஒப்பந்தத்தை ஏமாற்றும் பொருட்டு தான் இந்த பவர் பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி இவ்வழக்கை 1999 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. 3,4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை 2 ம் பிரதிவாதி பவர் ஏஜென்ட் மூலம எப்போது கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் 2003 ம் ஆண்டு எழுதியுள்ளார்கள். 13.06.2001 ம்தேதி தான் மேற்படி கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம், அது அவர்களுக்குள்ளாக எழுதிக் கொண்டது. 09.12.2002 ம் தேதி 3 ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பாதி பங்கை 4 ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். வாதியை மேற்படி இரு கிரய பத்திரம் மற்றும் பவர் பத்திரம் கட்டுப்படுத்தாது என்றால் வாதிக்கு நான் ஒப்பந்தமே கொடுக்கவில்லை, அவரும் மோசடியாக தான் எழுதியுள்ளார். வாதி லாரி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். வாதியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 21 ஆண்டுகளாக பழக்கம்.வாதியிடம் எனக்கு வரவு செலவு உள்ளது என்றால் ஆமாம், கடன்

வாங்கியிருக்கிறேன். எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் ஒரு முறை



ரூ.50,000/- கடன் வாங்கினேன், செக் மற்றும்பாண்டு கொடுத்து வாங்கிகேன். எந்த தேதியில் அந்த கடன் வாங்கினேன் என்றால் 1998 ம் ஆண்டு வாங்கினேன், தேதி , மாதம் தெரியவில்லை. அந்த கடனை திரும்ப செலுத்திவிட்டேனா என்றால் அவர் சுரேஷ் என்பவர் மூலம் காசோலை வழக்கு தொடர்ந்திருந்தார் அதில் தீர்ப்பான பின் ரூ.90,000/- செலுத்தி அந்த கடனை தீர்த்தேன். சுரேஷ் தாக்கல் செய்த வழக்கிற்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இடையே வரவு செலவு இருந்ததையோ மேற்படி காசோலை வழக்கு பற்றியோ நான் பணம் திரும்ப கொடுத்தது பற்றியோ என் எதிருரையிலோ , நிருபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 6.8.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS